# இசையமுது

முதற் பகுதி

பாரதிதாசன் பதிப்பகம்

— புதுச்சேரி —

இசையமுது: முதற்பகுதி
அரங்கு நிகழ்ச்சிப் பதிப்பு

— விலை எட்டு அணா —

இந்நூலின் பாடலையோ பாடல் வரிகளையோ ஆசிரியர் ஆணையின்றி எவரும் எங்கும் எடுத்தாளக் கூடாது.

அச்சு: பழநியம்மா அச்சகம்
— புதுச்சேரி —

## வண்டிக்காரன்

அதோ பாரடி அவரே என் கணவர்—
    அதோ பாரடி!

புதுமாட்டு வண்டி ஓட்டிப்
போகின்றார் என்னை வாட்டி!
    அதோ பாரடி!

இருப்பவர் உள்ளே முதலாளி செட்டி
ஏறுகால் மேல்தானென் சர்க்கரைக்கட்டி
தெரிய வில்லையோடி தலையில் துப்பட்டி?
சேரனே அவர் என்றால் அதில் என்ன அட்டி?
    அதோ பாரடி!

ஐந்து பணத்தினை என்னிடம் தந்தார்
அடிசாயும் முன்னே வரவு மிசைந்தார்
அந்தி வராவிட்டால் பெண்ணே இந்தா
"ஆசைமுத்தம்" என்று தந்து நடந்தார்!
    அதோ பாரடி!

---

குறிப்புரை—

அடிசாயும் முன்வந்து விடுவேன், அப்படி அந்திவரா விட்டால் நீ இதைச் சுவைத்துக்கொண்டே இரு என்று தன் கணவன் ஓர் ஆசைமுத்தம் கொடுத்துச் சென்றானும். வண்டிக்காரன் மனைவி, தன் தோழியிடம் சொல்லுகிறாள். அடி-பரிதிநிற்கும் நிலை, சாய்தல்-மேற்றிசையில் சாய்தல்.

# மாடுமேய்ப்பவன்

மாடுமேய்ப் பவனிடம் எனக்கென்னவேலை?
வஞ்சிஎன் றழைத்தான் ஏனென்றேன் மாலை!—
மாடுமேய்ப்பவனிடம் எனக்கென்ன வேலை?

பாடொரு பாட்டென்றேன் பாடி இருந்தான்
பைந்தமிழ் கேட்டுநான் ஆடி யிருந்தேன்—
மாடுமேய்ப்பவனிடம் எனக்கென்ன வேலை?

"ஓடையில் தாமரை வாடிடும்" என்றான்
உள்ளங்கை விரித்தும் கூப்பியும் நின்றேன்
"வாடாத தாமரை உன்முகம்" என்றான்
மலர்காட்டி முகங்காட்டி வாய்பார்த்து நின்றேன்
"கூடியிருக்க" என்றான் கைகோத்து நின்றேன்
காடும் கமழ்ந்தது நான்விட் டகன்றேன்
மாடுமேய்ப்பவனிடம் எனக்கென்ன வேலை?

காளைசொற் படிமறு நாளைக்குச் சென்றேன்
"கனிபோன்ற தென்பாங்கு பாடாயோ" என்றான்
வேளை யாகிவிடும் என்று நவின்றேன்
விரும்பிப் பசுக்கறந்து "குடி" என்று நின்றான்
ஆளன் கொடுத்தபா லாமூக்குப்பால் என்றேன்
"அல்லடி காதற் கலப்பால் தான்" என்றான்
மாடுமேய்ப்பவனிடம் எனக்கென்ன வேலை?

---

மாடு மேய்ப்பவனிடம் உனக்கென்ன இத்தனை நெருக்கம் என்று ஐயுற்றுக் கேட்ட தாய்க்குத் தலைவி, மேற்போக்காக அப்படி ஒன்றுமில்லையே என்று கூறி, அவனுடன் தான் ஒன்றுபட்டதையும் விளக்கி விடுகிறாள்.

# பாவோடும் பெண்கள்

நடை ஓவியங்கள்! அடடா!
நடுவீதியிற் பாவோடும் மடவார்—
நடை ஓவியங்கள்!

இடதுகைத் திரிவட்டம் எழிலொடு சுழலும்
ஏந்தும் வலதுகை வீசுமுள் அசையும்—
நடை ஓவியங்கள்!

தண்டை யாடிடும் காலில்!
கெண்டை விழிபோகும் நூலில்!
கொண்டை மேலெலாம் நறுமலர்க்காடு
கொடியிடை அசையும் மிக அழகோடு—
நடை ஓவியங்கள்!

உலகினுக் குடை தேவை
உடைக்கு வேண்டும் நூற்பாவே
உலவும் மங்கைமார் இதனை எண்ணுவார்
உயிரும் உணர்வுமாய்த் தொண்டு நண்ணுவார்—
நடை ஓவியங்கள்!

---

குறிப்புரை—

உலக மக்கட்கு இன்றியமையாதன உணவு, உடை உறையுள் என்பர். உடைக்குத் தேவை நூற்பாவு—நூலால் ஆகிய பாவு. இதை எண்ணித் தொண்டு செய்கின்றார்கள் அப்பெண்கள்.

## தறித்தொழிலாளி நினைவு

இழை யெலாம் அவள் பூங்
குழலோ! கைத்தறியின்— இழை
பிழைசெய்தாள் என்றுதாய் துரத்தினுள்—என்
விழியெலாம் அவளையே பொருத்தினுள்
தொழில் முடிந்ததும் உணவுண்டு—நான்
தூங்கு முன்னே எனைக்கண்டு—மங்கை,
''எழுதினீர்களா மேற்கொண்டு—பதில்
என்தாய்க்'' கென்று கேட்டதுண்டு—தேன்
பிழியும் அவளிதழ் தின்றதா பிழை?—அவள்
பின்னும் என்னிடம் நின்றதா பிழை? இழை
தார்கொண்ட நாடாவைக் கையினுல்—நான்
தறியில் கோப்பதும் தேவை—அன்றே?
பார்கொண்ட மானத்தை—நான்
பாதுகாப்பதும் தேவை—மிகச்
சீர்கொண்ட என்குளிர் பூங்காவை—நான்
சேரவும் கேட்க வேண்டும் அம்மாவை!

---

தறிப்புரை—

என்னை என் மனைவி நெருங்கவிடுவதில்லை. ஒருநாள் தூங்குமுன் அவள் தன் தாய்க்கு அஞ்சல் எழுதினீர்களா என்று கேட்க, எப்படியோ என்னைத் தனியே வந்து கண்டாள், காதல் பதைப்பால் நான் அவளோடு அளவளாவியிருந்தேன் இது பிழையா? அதனுல் அவளைத்துரத்திவிடுவதா என்று வருந்துகிருன். இது முதலடியின் கருத்து.
நான் மக்களின் மானத்தைக் காக்கவும் வேண்டும். அவ்வுழைப்பாகிய கோடையினின்று எனக்குரிய மலர்ச்சோலை (மனைவி)யை அடையவும் அம்மாவின் ஒப்புதல் கேட்கவேண்டுமா? என்பது இரண்டாம் அடியின் கருத்து.

## உழவன் பாட்டு

சென்று பொழுதுசாய —வரு
கின்றேனடி விரைவாக!
இன்று தவறினுல் ஈரம் போகுமடி
இருட்டிப் போகுமுன் விதைக்கலாகுமடி— சென்று
வேலி முள் சுமந்த கூலிகொடடி
ஆள் வந்தால்—நீ
வேளை ஆகுமுன் கொண்டுவா
கூழி ருந்தால்!
வேலைக்காகப் பகல் போதில்
உன்னைப் பிரிந்தால்
விடியுமட்டும் யார் கேட்பர்
காதல் புரிந்தால்— சென்று
சேவல் குரல்கிழியக் கூவல்
கேளடி கரும்பு!—நின்
ஆவல் தெரியுமடி போக
விடைகொடு! திரும்பு!
தேவையிருக்கையில் உன்றன்
நெஞ்சோ இரும்பு!
சிவலைப் பசுவுக்கோ தீனி
வைக்க விரும்பு— சென்று

---

குறிப்புரை—

சேவல் கூவுகிறது. கேளடி கரும்பே. உன் ஆவல் இன்னதென்பது தெரியும் எனக்கு, ஆயினும் விடைகொடு. முகத்தை ஏன் திருப்பிக்கொண்டாய். திரும்பு தேவை யிருக்கையில் அதாவது நான் விரைவாகப் போகவேண்டும் என்ற தேவை எனக்கிருக்கையில் உன் நெஞ்சம் ஒப்ப இளகாத இரும்பாகிறது. இந்த வருத்தத்தில் நம் சிவலைக்குத் தீனி வைக்காமல் இருந்துவிடாதே. வைக்க விரும்பு. என்பது இரண்டாம் அடியின் கருத்து.

# உழத்தி

களை யெடுக்கின்றாள் — அதோ
கட்டழகுடையாள் சிற்றிடையாள் — அதோ
களையெடுக்கின்றாள்!

வளவயல்தனில் மங்கைமாருடன்
இளங் கரும்பிடைச் செங்கரும்புபோல்
களையெடுக்கின்றாள்!

கவிழ்ந்த தாமரை
முகம் திரும்புமா? அந்தக்
கவிதை ஓவியம்
எனை விரும்புமா?
அவிழ்ந்து வீழ்ந்த கருங்கூந்தலாம்
அருவிநீரில் எப்போது முழுகலாம்? — களை

"செந்நெல் காப்பது
பொதுப்பணி செய்யல்! — ஆம்"
என்ற நினைவினால்
என்னருந் தையல்
மின்னுடல் வளைய வளையல்கள் பாட
விரைவில் செங்காந்தள் விரல்வாட — களை

---

குறிப்புரை—

இளங் கரும்பு சிறப்பில்லை. செங்கரும்பு அதாவது முற்றிய கரும்பு சிறப்புடையது; மற்றப் பெண்களின் நடுவில், தான் விரும்பும் ஒருத்தியை இளங் கரும்பிடைச் செங்கரும்பு என்றான் காதலன்.

# ஆலைத்தொழிலாளி

ஆலையின் சங்கே நீ ஊதாயோ? மணி
ஐந்தான பின்னும் பஞ்சாலையின்...

காலைமுதல் அவர் நெஞ்சம் கொதிக்கவே,
வேலை செய்தாரே என்வீட்டை மிதிக்கவே
ஆலையின் சங்கே...

மேலைத் திசைதனில் வெய்யிலும் சாய்ந்ததே
வீதி பார்த்திருந்த என் கண்ணும் ஓய்ந்ததே [ததே
மேலும் அவர்சொல் ஒவ்வொன்றும் இன்பம் வாய்ந்
விண்ணைப் பிளக்கும் உன் தொண்டையேன் காய்ந்
ஆலையின் சங்கே... [ததே

குளிக்க ஒருநாழிகை யாகிலும் கழியும்
குந்திப்பேச இரு நாழிகை ஒழியும்
விளைத்த உணவிற்கொஞ்ச நேரமும் அழியும்
வெள்ளி முளைக்குமட்டும் காதல் தேன் பொழியும்
ஆலையின் சங்கே...

---

குறிப்புரை—

அவர் மாலை 5 மணிக்கு வந்தால் குளிப்பது முதலிய வற்றிற்குக் கழிந்த நாழிகை போக நானும் அவரும் காதல் இன்பத்தை அடைவதற்குள் வெள்ளி முளைக் கும்படி ஆய்விடுகிறது. ஆகையால் ஆலையின் சங்கே ஏன் இன்னும் ஊதாமல் இருக்கிருய்? — என்பது இரண்டாம் அடியின் கருத்து.

# இரும்பாலைத் தொழிலாளி

அழுக்குத் துணிக்குள்ளே அறத்தொடு பிணைந்துள்ள
அவ்வுயிரே என்றன் ஆருயிராம்!

பழுப்பேறக் காய்ச்சிய இரும்பினைத் தூக்கி
உழைப்பாலும் உணர்வாலும் உலகை உண்டாக்கி-
வழுக்குத் துணிக்குள்ளே... [இவ்

பழக்காடும் கிளியும் போல் நானும் அத்தானும்
பகற்போதைக் கழித்தபின் அவன் கொஞ்சமேனும்
பிழைஇன்றி ஆலைக்குச் சென்றுதன் மானம்
பேண இராவேலையைக் காணுவிடிலோ ஊனம்
தழற் காட்டிலே இரும்புச் சரக்கும் உருகக்கண்டு
விழிப்போடிருந்து வேண்டும் உருப்படி செய்வதுண்டு
அழுக்குத் துணிக்குள்ளே...

அறம்புரிவார் எய்தும் இன்பமே இன்பம்
அயலார்க்கு நலம்செய்யார் எய்துவார் துன்பம்
இறந்து படும் உடலோ ஏகிடும் முன்பும்
''அறஞ்செய் அறஞ்செய் என்றே அறிவே எனை
[அழைத்தால்
இறந்தார்போல் இருப்பேனோ'' என்பான் என்
[அத்தான்
அழுக்குத் துணிக்குள்ளே...

---

குறிப்புரை—

அழுக்குத்துணி யுடுத்துள்ள நிலை அழுக்குத் துணிக்குள் இருக்கின்றான் என்று கூறப்பட்டது.
அறம்-மாசற்ற நெஞ்சும் செயலும்.

## கோடாலிக்காரன்

வெய்யில் தாழ வரச் சொல்லடி—இந்தத்
தையல் சொன்ன தாகச் சொல்லடி
    வெய்யில் தாழ வரச் சொல்லடி

கையில் கோடாலி கொண்டு
கட்டை பிளப் பாரைக் கண்டு
கொய்யாக் கனியை இன்று
கொய்து போக லாகும்என்று
    வெய்யில் தாழ வரச் சொல்லடி

கூரைக்குபின் னல் இருக்கும் தென்னை— அதன்
கூட இருக்கும் வளர்ந்த புன்னை
நேரினிலே காத்திருப்பேன்! என்னை
நிந்திப்பதில் என்னபயன் பின்னை?
    வெய்யில் தாழ வரச் சொல்லடி

தாய் அயலூர்ச் சென்றுவிட்டாள் நாளை—சென்று
தான் வருவாள். இன்று நல்ல வேளை
வாய் மணக்கக் கள்ளொழுகும் பாளை-நாள்
மாறிவிட்டால் ஆசை எல்லாம் தூளை
    வெய்யில் தாழ வரச் சொல்லடி

---

குறிப்புரை

கோடாலி-கோடாரியின் மரூஉ.
கொய்யாக்கனி-யாராலும் கொய்யமுடியாத பழம்.
வாய்மணக்கக் கள் ஒழுகும் பாளை-பாளை வாய் மணக்கக் கள் ஒழுகிக்கொண்டிருக்கிறது.
நாளை சென்று-நாளை மறுநாள்.

## கூடைமுறம் கட்டுவோர்

கசங்கு சீவடி பிரம்பு செற்றடி
கைவேலை முடித் திடலாம் — நம்
பசங்கள் பசிக்கு விரைவில் சென்றால்
பழையதைக் கொடுத் திடலாம்

பிசைந்து வைத்துள மாவும் தேனும்
பீர்க்கங் கொடியின் ஓரம் — அந்த
உசந்த பானை திறந்து சுரடி
உருட்டிடும் இந்த நேரம்

கூடைமுறங்கள் முடித்துவிட்டேன்
காடை இறக்கை போலே — இனி
மூடுதட்டும் குழந்தை மூச்சிலும்
முடிப் பதுதான் வேலை

காடு வெட்டவும் உதவி யில்லாக்
கழிப்புக் கத்தியைத் தீட்டி — நீ
எடுபத்தாய் மூங்கில் பிளக்க
எழுந்திரு கண் ணாட்டி

சோடியாக நா மிருவர்
கூடி உழைக்கும்போது — நம்
ஓடும் நரம்பில் உயிர் நடப்பதை
உரைத்திட முடி யாது

பாடி நிறுத்தி நீ கொடுத்திடும்
பாக்கு வெற்றிலைச் சருகும் — அத
னோடு பார்க்கும் பார்வையும் என்
உயிரினை வந்து திருகும்

குறிப்புரை—

கூடைமுறம் கட்டியிருக்கும் காதலன், காதலியிடம் கூறியது.

## பூக்காரி

சேர்த்துக் கட்டிய முல்லை வேண்டும்என்றேன்—நல்ல
சேயிழை அவள் சிரிப்பு முல்லை தந்தாள்!

பார்த்துப் பறித்த தாமரைப்பூத்
தீர்த்து விலைக்குக் கொடடி என்றேன்
பூத்த முகத் தாமரையால்
புதுமை காட்டி மயக்கி நின்றாள் சேர்த்து

தேவை யடி தாமரை இதழ் என்றேன்—அவள்
தேனொழுகும் வாயிதழ்மலர் என்றாள்—ஒரு
பூவைக் காட்டிப் பேர்சொல் என்றேன்
பூவை ''என்பேர் பூவை'' என்றாள்
ஆவல் அற்றவன் போல் நடந்தேன்
அவள் விழிதனில் அலரி கண்டேன் சேர்த்து

காவல் மீறிக்கடைக்கு வந்துவிழுந்து—பலர்
கண்பட வாடிய மருக்கொழுந்து நீ!
மேவா தடி என்று சொன்னேன்
வேங்கையில் ஈ மொய்க்கா தென்றாள்
தேவைக்கு மணம் வேண்டும் என்றேன்
திருமணம் என்று தழுவி நின்றாள் சேர்த்து

குறிப்புரை—

அவள்மேல் ஆவல் இல்லாதவன் போல் நான் விலகி நடந்தேன். அப்போது அவள் விழியில் அலரி-அலரிப்பூப் போன்ற செந்நிறத்தைக்கண்டேன். அதாவது அவள் எரிச்சல் அடைந்தாள்.
மேவாதடி-உனக்கும் எனக்கும் பொருந்தாதடி என்றேன். அதற்கவள் நான் வேங்கைமலர்; ஈ மொய்த்ததில்லை என்று தன் கற்பை விளக்கினாள்.

# குறவர்

காடைக் காரக் குறவன் வந்து
பாடப் பாடக்—குறத்தி தான்
கூடக் கூடப் பாடி ஆடிக்
குலுங்கக் குலுங்கச் சிரித்தனள்

சாடச் சாட ஒருபுறப் பறை
தக தகவென் ருடினுள்
போடப் போடப் புதுப் புதுக்கை
புதுப்புதுக்கண் காட்டினுள்

ஓடிச்சென்று மயிலைப் போல
ஒதுங்கி நிலையில் நிமிர்ந்துமே
மூடி மலர்க்கை திறந்து வாங்கி
முறிப்பும் முத்தமும் குறித்தனள்

தேடத் தேடக் கிடைப்ப துண்டோ
சிறுத்த இடுப்பில் நொடிப்புகள்
ஈடுபட்டது நேரில் முத்தமிழ்
ஏழை மக்களின் வாழ்விலே!

---

குறிப்புரை—

ஒருபுறப் பறை-குறவர் பறை.
முறிப்பும் முத்தமும்-உள்ளங்கை மூடித்தலையில்
இரட்டை முறித்து முத்தங் கொடுத்தல்.
நொடிப்பு-சிற்றசைவு.

## தபாற்காரன்

வருகின்றார் தபால்காரர்—கடிதம்
தருகின்றாரோ இல்லையோ—
வருகின்றார் தபால்காரர்!

தருகின்றார் கடிதம் எனினும் அதுஎனக்
குரியதோ என் தந்தைக் குரியதோ
வருகின்றார் தபால்காரர்!

வரும் அக்கடிதம் அவர் வரைந்ததோ
மாமியார் வரைந்ததோ
திருமணாளர் வரைந்த தாயினும்
வருவதாய் இருக் குமோ இராதோ
வருகின்றார் தபால்காரர்!

அன்பர் அவர் வருவ தாயினும்
ஆடி போக்கியோ, விரைவிலோ
இன்று போதல்நா றாண்டு போதலே
அன்றி நாளைஎன் பதுவென் சாதலே
வருகின்றார் தபால்காரர்!

---

குறிப்புரை—

ஆடித் திங்கள் என்று தாய்வீட்டுக் கழைத்துச் செல்லப்பட்ட புதுப்பெண் பிரிவு ஆற்றாது துன்புறுகிறாள். அவரைப் பிரிந்து இன்றைய பொழுதைப் போக்குவது நாறாண்டுகளைப் போக்குவதுபோலிருக்கும். நாளைக்குத்தான் அவர் வருவார் என்று முடிந்தால் அது எனக்குச் சாவை உண்டாக்கும் என்கிறாள்.

## சுண்ணும்பிடிக்கும் பெண்கள்

மந்தையின் மாடு திரும்பையிலே—அவள்
மாமன் வரும் அந்தி நேரத்திலே
குந்தி இருந்தவள் வீடு சென்ருள்—அவள்
கூட இருந்தாரையும் மறந்தாள்
தொந்தி மறைந்திட வேட்டிகட்டி—அவன்
தூக்கி வந்தானொரு வெல்லக்கட்டி
இந்தா எனக்கொடுத் திட்டாண்டி!—அவன்
எட்டி ஒரே முத்தம் இட்டாண்டி!

கட்டி வெல்லத்தைக் கசக்குதென்ருள்—அவன்
கட்டாணி முத்தம் இனிக்குதென்ருள்
தொட்டியின் நீரில் குளிக்கச் சொன்னுள்—அவன்
தோளை அவள்ஓடித் தேய்த்து நின்ருள்
"கொட்டிய நீரில் குளிர்ச்சி உண்டோ? இந்தக்
கோடை படுத்திடும் நாளில்" என்ருள்
"தொட்டியின் தண்ணீர் கொதிக்கு" தென்ருன்—நீ
தொட்ட இடத்தில் சிலிர்க்குதென்ருன்.

---

குறிப்புரை—

இது சுண்ணும்பு இடிக்கும் பெண்களில் ஒருத்தியைப் பற்றி மற்ருெருத்தி, தன் தோழிமாரிடம் கூறுவது. அவள் கேட்டாள் கடைசியாக: இந்தக் கோடையில், தொட்டியில் நான் நிரப்பிய தண்ணீர் குளிரைச் செய் கிறதல்லவா?

அவன்: அந்தத் தண்ணீர் கொதிக்கிறது. ஆனுல் உடம்பு தேய்ப்பதால் நீ தொடுகின்ற இடத்தில் சிலிர்க்கின்றது என்று பதில் கூறுகின்ருன்.

## ஓவியக்காரன்

ஓவியம் வரைந்தான் — அவன் தன்
உளத்தினை வரைந்தான்!
ஒல்லி இடை எழில் முல்லைநகை இரு
வில்லைநிகர் நுதல் செல்வியை வைத்தே
ஓவியம் வரைந்தான்!

கூவும் குயில்தனைக் கூவா திருத்திக்
கூந்தல் சரிந்ததென் றேந்தித் திருத்தி
மாவின் வடுப்போன்ற கண்ணை வருத்தி
வஞ்சியின் நெஞ்சத்தைத் தன்பாற் பொருத்தித்
தேவை எழுதுகோல் வண்ணம் தனைத்தே
தீர்ந்தது தீர்ந்தது சாய்ந்திடேல் என்றே
ஓவியம் வரைந்தான்!

காதலைக் கண்ணிலே வை! என்று சொல்வான்
கணவனைஎன்னை எண்ணென்று சொல்வான்
ஈதல்ல இவ்வாறு நில்லென்று சொல்வான்
இதழினில் மின்னலை ஏற்றென்று சொல்வான்
கோதை அடியில்தன் கை கூப்புதல் போலவும்
கொள்கை மகிழ்ந்தவள் காப்பது போலவும்
ஓவியம் வரைந்தான்!

---

குறிப்புரை—

ஓவியக்காரன், மங்கையொருத்தியை எதிரில் இருத்தி அவள்போல் எழுதுகின்றான். மேலும் அவன் தன் உள்ளத்தில் அவள்பற்றி எழும் எண்ணத்தை வரைகின்றான். கடைசி இருவரிகளை நோக்குக! தான் அவள் காலைத்தொழுவதுபோலவும் அவள் அதற்கு மகிழ்ந்து ஒப்பியது போலவும் எழுதி முடிக்கிறான்.

## சிறுவர்

### இன்பம்

பசி என்று வந்தால் ஒருபிடி சோறு
புசி என்று தந்துபார் அப்பா,
பசி என்று வந்தால்...

பசையற்ற உன்நெஞ்சில் இன்பம் உண்டாகும்
பாருக் குழைப்பதே மேலான யோகம்
பசி என்று வந்தால்...

அறத்தால் வருவதே இன்பம்—அப்பா,
அதுவலால் பிறவெலாம் துன்பம்!
திறத்தால் அறிந்திடுக அறம் இன்ன தென்று
செப்புநூல் அந்தந்த நாளைக்கு நன்று!
பசி என்று வந்தால்...

மனுவின்மொழி அறமான தொருநாள்—அதை
மாற்றுநாளே தமிழர் திருநாள்!
சினம், அவா, சாதி, மதம் புலைநாறும் யாகம்
தீர்ப்பதே இந்நாளில் நல்லறம் ஆகும்!
பசி என்று வந்தால்...

---

குறிப்புரை

செப்பு நூல் அந்தந்த நாளைக்கு நன்று - அந்தந்தக் காலத்திற்கு ஏற்றவாறு நூல்கள் திறம்பட இயற்று!

# சிறார் பொறுப்பு

இன்று குழந்தைகள் நீங்கள்— எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகாள்!
ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

குன்றினைப்போல உடல்வன்மை வேண்டும்!
கொடுமை தீர்க்கப்போ ராடுதல் வேண்டும்!
தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்
அன்றன்று வாழ்விற் புதுமை காணவேண்டும்
இன்று குழந்தைகள் நீங்கள்!

பல்கலை ஆய்ந்து தொழில்பல கற்றும்,
பாட்டிற் சுவை காணும் திறமையும் உற்றும்,
அல்லும் பகலும் இந் நாட்டுக் குழைப்பீர்கள்!
அறிவுடன் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

---

குறிப்புரை—

தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்-பழமையையே பாராட்டி அலுத்துப் போகாமல் என்றபடி.

## தூய்மை

தூய்மை சேரடா தம்பி—என்
சொல்லை நீ பெரிதும் நம்பித்
தூய்மை சேரடா தம்பி!

வாய்மையாலும் ஒழுக்கத்தினாலும் அகத்,
தூய்மை உண்டாகும் மேலும் மேலும்
தூய்மை சேரடா தம்பி!

உடையினில் தூய்மை— உண்ணும்
உணவினில் தூய்மை— வாழ்வின்
நடையினில் தூய்மை— உன்றன்
நல்லுடற் றூய்மை— சேர்ப்பின்
தடையில்லை வாழ்நாள் ஒவ்வொன்றும் இன்பம்
தரும்நாள் ஆகும் நீ என்றும்
தூய்மை சேரடா தம்பி!

துகளிலா நெஞ்சில்— சாதி
துளிப்பதும் இல்லை;— சமயப்
புகைச்சலும் இல்லை;— மற்றும்
புன்செயல் இல்லை;— தம்பி
அகத்திலே அன்பின் வெள்ளமே மூளும்; தீய
அச்சம் போகும்; நீ எந்நாளும்
தூய்மை சேரடா தம்பி!

---

குறிப்புரை—

புறந் தூய்மை நீரான் அமையும் அகந் தூய்மை
வாய்மையாற் காணப்படும் என்பது குறள்.

# அன்பு

அன்பை வளர்த்திடுவாய்—மெய்
யன்பை வளர்த்திடுவாய்

கூடப் பிறந்த குழந்தையிடத்தினில்
கொஞ்சுதல் அன்பாலே!—உற
வாடி அம்மாவை மகிழ்ந்த மகிழ்ச்சியும்
அன்பின் திறத்தாலே!
தேடிய அப்பத்தில் கொஞ்சத்தை இன்னொரு
சின்னவனுக்குத் தர—நீ
ஓடுவ துண்டெனில் கண்டிருப்பாய் உன்
உள்ளத்திருந்த அன்பை!

கன்றையும் ஆவையும் ஒன்ருய் இணைத்தது
கருதில் அன்பன்ரே?
உன்னையும் உன்னரும் தோழர்கள் தம்மையும்
ஒட்டிய தன்பன்ரே?
சென்னையி னின்ருெரு பேர்வழி வந்ததும்
சிட்டுப் பறந்ததுபோல்—நீ
முன்னுற ஓட உன் உள்ளம் பறந்ததும்
முற்றிலும் அன்பன்ரே?

---

*குறிப்புரை—*

கறவை-கறவைமாடு. கருதில்-எண்ணினுல்.
உயிர் இருக்கும் உடம்பு அன்புநெறியில் இயங்குவது.
அன்பிலார் உடல் தோலால் மூடப்பெற்ற எலும்புக் கூடே என்ருர் திருவள்ளுவர்.

# மெய்

மெய் சொல்லல் நல்ல தப்பா! தம்பி
மெய் சொல்லல் நல்ல தப்பா!

கண்டதைச் சொல்லென்று சொன்னாலும்,—நீ
உண்டதைச் சொல்லென்று சொன்னாலும்,
மண்டை யுடைத்திட வந்தாலும்,—பொருள்
கொண்டுவந் துன்னிடம் தந்தாலும்,
மெய்சொல்லல் நல்லதப்பா!

பின்னவன் கெஞ்சியும் நின்றாலும், அன்றி
முன்னவன் அஞ்சிட நின்றாலும்,
மன்னவரே எதிர் நின்றாலும்,—புலி
இன்னவரே னென்று சொன்னாலும்—நீ
மெய்சொல்லல் நல்லதப்பா!

---

குறிப்புரை

பின்னவன் - தம்பி, முன்னவன் - அண்ணன்.
உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்

இக்குறளின் கருத்து:
ஒருவன் தன் உள்ளத்திற் கேற்பப் பொய்சொல்லாது நடப்பானாயின் அவன் உயர்ந்தோர் எல்லாருடைய உள்ளத்திலும் இருப்பான்.

# பொறுமை

பொறுமைதான் உன்றன் உடைமை! அதைப்
போற்றலே கடமை

பொறுமையால் கழியும் நாளிலே
புதுவன்மை சேருமுன் தோளிலே!
பொறுமைதான் உன்றன் உடைமை!

பொறுமையுடைய ஏழையே கொடையன்!
பொறுமை யிலாதவன் கடையன்!
இறைவனே எனினும் பிழை செய்தோன்,
ஏதுமற்றவனாகி நைவான்!
பொறுமைதான் உன்றன் உடைமை!

பலமுறை பொறுப்பாய் வேறு
பழுதும் நேருமெனில் சீறு!
நிலைமை மிஞ்சுகையில் பகைவனை
நீறுக்குவலே பொறுமையின் பயன்
பொறுமைதான் உன்றன் உடைமை!

---

குறிப்புரை—

உடைமை–செல்வம்.
இறைவன்–அரசன்.
அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (குறள்)

## சினம்

சினத்தை யடக்குதல் வேண்டும், சினம்
உனக்கே கெடுதியைத் தூண்டும்!

சினத்தினை யடக்கிட முடியுமா என்று
செப்புகின்றாய் எனில் கேள் இதை நன்று:

வலிவுள்ளவன் என்று கண்டு,—சினம்
வாராமலே யடக்கல் உண்டு;
வலிவிலான்மேல் அன்புகொண்டு—அதை
மாற்றுதான் பெரிய மண்டு!
நலியும் மொழிகளைப் பேசவும் சொல்லும்
நாக்கையும் பல்லால் நறுக்கவும் சொல்லும்
சினத்தை யடக்குதல் வேண்டும்!

அடங்கா வெகுளிமண் மேலே,—காட்
டாறுபோய்ச் சீறுதல் போலே,
தொடர்ந்தின்னல் செய்யுமத னாலே—அதைத்
தோன்றாமலே செய்க உன் பாலே!
கடிதில் சுடுமிரும்பைத் தூக்கவும் வைக்கும்
கண்ணாடி மேசையைத் தூளாய் உடைக்கும்
சினத்தை யடக்குதல் வேண்டும்!

---

குறிப்புரை—

சினம்-வெகுளி.
சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி, இனம் என்
ஏமப்புணையைச் சுடும்; (குறள்) [னும்

இதன் கருத்து:
தன்னைச் சேர்ந்தவரைக் கொல்லும் சினம் என்னும்
நெருப்பானது, தொல்லை தந்தால் காப்பாற்றுகின்ற
தம் இனத்தாராகிய தெப்பத்தையும் பொசுக்கிவிடும்.

## மழை

மழையே மழையே வா வா—நல்
வானப் புனலே வா வா;—இவ்
வையத்தமுதே வா வா!

தழையா வாழ்வு தழைக்கவும்—மெய்
தாங்கா வெப்பம் நீங்கவும்
உழுவாரெல்லாம் மலைபோல் எருதை
ஓட்டிப் பொன்னேர் பூட்டவும் மழையே...

தகரப்பந்தல் தணதண வென்னத்
தாழும் குடிசை சளசள என்ன
நகரப் பெண்கள் செப்புக் குடங்கள்
நன்றெங் குங்கண கண கண வென்ன மழையே...

ஏரி குளங்கள் வழியும்படி, நா
டெங்கும் இன்பம் பொழியும்படி, பொடி
வாரித்தூவும் பூவும் காயும்
மரமும் தழையும் நனைந்திடும்படி, மழையே...

இல்லாருக்கும், செல்வர்கள் தாமே
என்பாருக்கும், தீயவர் மற்றும்
நல்லாருக்கும் முகிலே சமமாய்
நல்கும் செல்வம் நீயேயன்றோ? மழையே...

---

தறிப்புரை—

நீரின் றமையா துலகெனின் யார் யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. ( குறள் )

இக்குறட்பாவின் கருத்து:

எவர்க்கும் நீரில்லாவிடில் வாழ்க்கை நடவாது. அந்த நீரோட்டமோ மழையில்லாவிடில் ஏற்படாது.

# நிலா

முழுமை நிலா! அழகு நிலா!
முளைத்ததுவின் மேலே—அது,
பழைமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந்தாற் போலே!
அழுதமுகம் சிரித்ததுபோல்
அல்லி விரிந் தாற்போல்,—மேல்
சுழற்றி எறிந்த வெள்ளித்தட்டுத்
தொத்திக்கிடந் தாற்போல்
முழுமை நிலா! அழகு நிலா!

குருட்டு விழியும் திறந்ததுபோல்
இருட்டில் வான விளக்கு!—நம்
பொருட்டு வந்ததுபாடி ஆடிப்
பொழுதுபோக்கத் துவக்கு!
மரத்தின் அடியில் நிலவெளிச்சம்
மயிலின் தோகை விழிகள்!—பிற
தெருக்கள் எல்லாம் குளிரும் ஒளியும்
சேர்த்து மெழுகும் வழிகள்!
முழுமை நிலா! அழகு நிலா!

---

குறிப்புரை—

மரத்தின் அடியில் நிலவெளிச்சம் மயிலின் தோகை விழிகள் என்பது, நிலாவின் ஒளி மரத்தின் அடியில்-தரையில் மயில் தோகையில் உள்ள கண் போலத் தோன்றும் என்றபடி. நில-நிலா.

## கறவை

நிறையப் பால்தரும் கறவை!—நீ,
மறவேல் அதன் உறவை!
குறைவிலாது வைத் திடுக தீனியைக்
குளிப் பாட்டிவா நாளும் மேனியை!
நிறையப் பால்தரும் கறவை!

நோய் மிகுத்து மாளும்!—கொட்டில்
தூய்மைசெய்எந் நாளும்!
தோய்வு குப்பை கூளம்,—இன்றித்
துடைக்க ஏன் ஒக்காளம்?
வாய் மணக்கவே, உடல் மணக்கவே,
வட்டில் நெய்யோடு கட்டித்தயிர் ஏடு
நிறையப் பால்தரும் கறவை!

ஈக்கள் மொய்த்தல் தீது!—கூடவே
எருமை கட்டொ ணாது!
மேய்க்கப்போகும் போது,—மேய்ப்போன்
விடுக பசும்புல் மீது!
நோக்கும் கன்றினும், நமது நன்மையைக்
காக்கும் தாயடா! காக்கும் தாயடா!
நிறையப் பால்தரும் கறவை!

---

தறிப்புரை—

கறவை-கறக்கும் ஆ.
மறவேல்- மறக்காதே,
தோய்வு-சிறுநீர் முதலியவை
அது உற்றுப் பார்த்தபடி இருக்கும் தன் கன்றைவிட
நம் நன்மையைக் காக்கும் தாய் போன்றது என்பது
கடைசி இரண்டு வரிகளின் கருத்து.

# சிட்டு

இத்தனைச் சிறிய சிட்டு!—நீபார்!
எத்தனை சுறு சுறுப்பு—தம்பி!
இத்தனைச் சிறிய சிட்டு!

குத்தின நெல்லைத் தின்றுநம் வீட்டுக்
கூரையில் குந்தி நடத்திடும் பாட்டு!
இத்தனைச் சிறிய சிட்டு!

கொத்தும் அதன்மூக்கு முல்லை அரும்பு,
கொட்டை பிளந்திடத் தக்க இரும்பு!
தொத்தி இறைப்பினில் கூடொன்று கட்டும்
கூட்டை நீகலைத் தாலது திட்டும்!
இத்தனைச் சிறிய சிட்டு!

மல்லி பிளந்தது போன்றதன் கண்ணை
வளைத்துப் பார்த்த ளாவிடும் விண்ணைக்
கொல்லையில் தன்பெட்டை அண்டையில் செல்லும்
குதித்துக் கொண்டது நன்மொழி சொல்லும்.
இத்தனைச் சிறிய சிட்டு!

---

*குறிப்புரை—*

மல்லி-கொத்துமல்லி.
பார்த்தளாவிடும்-பார்த்து அளாவிடும் என்று பிரிக்க.
இதனால் பிள்ளைகள் சுறு சுறுப்புடன் தம் கடமையைச் செய்யவேண்டும் என்பது விளக்கப்படுகிறது.

## காக்கை

காக்கை யிடத்திலுள்ள ஒற்றுமை கண்டு,—நீ
வாழ்க்கை நடத்திஞல் நன்மை உண்டு— காக்

ஆக்கிய சோறு கொஞ்சம் சிந்திக்கிடக்கும்!—காக்கை
அழைத்துத்தன் இனத்தொடு குந்திப்பொறுக்கும்
காக்கை யிடத்திலுள்ள ஒற்றுமை...

காக்கையை ஒருபையன் கொன்றுவிட்டதால்—
காக்கைகள் அத்தனையும் கண்டுவிட்டதால் [அதைக்
கூக்குரல் இட்டபடி குந்திவருந்தும்!—அதைக்
கொன்றபையன் கண்டுதன் நெஞ்சுவருந்தும்...
காக்கை யிடத்திலுள்ள ஒற்றுமை...

வரிசையில் குந்தியந்தக் காக்கைகள் எலாம்—நல்ல
வரிசை கெட்டமக்களின் வாழ்க்கை நிலையைப்
பெருங்கேலி யாய்மிகவும் பேசியிருக்கும்—அதன்
பின்பவைகள் தத்தமிடம் நோக்கிப் பறக்கும்
காக்கை யிடத்திலுள்ள ஒற்றுமை...

---

*குறிப்புரை—*

மதம் என்றும் சாதி என்றும் ஏற்பட்டுள்ள வேற்று
மையால் மக்கள் வாழ்க்கை நிலை கேலிக் குரியதே
யாகும். காக்கைகள் ஒற்றுமை யுடையவை.

## நாய்

என்றன் நாயின்பேர் அப்பாய்!—அது
முன்றில் காக்கும் சிப்பாய்!

ஒன்றும் செய்யாது விளையாடும்; பெருச்சாளியைக்
கொன்றுபோடும்; குலைக்கும்எதிராளியை;
என்றன் நாயின்பேர் அப்பாய்...

அதன் இனத்தை அதுவே பகைக்கும்!—எனில்
அதுதான் மிகவும் கெட்ட வழக்கம்!—அது
முதல் வளர்த்தவன் போஎன்றாலும் போகாது;
மூன்றாண்டாயினும் செய்தநன்றி மறவாது!
என்றன் நாயின்பேர் அப்பாய்...

நாய் எனக்கு நல்லதோர் நண்பன்—அது
நான் அளித்ததை அன்புடன் உண்ணும்—என்
வாய் அசைத்திடில் முன்னின்றே தன் வாலாட்டும்
வருத்தினாலும் முன்செய்த நன்றி பாராட்டும்
என்றன் நாயின்பேர் அப்பாய்...

---

குறிப்புரை—

அப்பாய்-சிப்பாய் திசைச்சொற்கள்.
யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்.
என்பது நாலடியார்.
இதன் கருத்து: யானை போன்ற பண்புடையவரின் நட்பை நீக்குக. நாய்போலும் பண்புடையவரின் நட்பைக் கொள்ளுக என்பதாம்.

# பூனை

பூனைவந்தது பூனை!—இனிப்
போனது தயிர்ப் பானை!

தேனின் கிண்ணத்தைத் துடைக்கும் நெய்யைத்
திருடி உண்டபின் நக்குந்தன் கையை!
பூனைவந்தது!

பட்டம் பகல்தான் இருட்டும், — அது
பானை சட்டியை உருட்டும்!
சிட்டுக் குருவியும் கோழியும் இன்னும்
சின்ன உயிரையும் வஞ்சித்துத் தின்னும்
பூனைவந்தது!

எலிகொல்லப் பூனை, தோநு; — மெய்நான்
எங்கள் வீட்டில் எலி எது?
தலைதெரியாத குப்பை இருட்டறை
தன்னிலன்றோ எலிக் குண்டு திருட்டறை!
பூனைவந்தது!

குறிப்புரை—

எலியைக் கொல்லப் பூனையை வளர்ப்பார். பிறகு அப் பூனையின் தொல்லையை விலக்க முயலுவார். வஞ்ச நெஞ்சம் உடையது பூனை. எக்காரணத்தாலும் அதை வளர்க்க எண்ணலாகாது.

## காப்பி

காப்பி எதற்காக—நெஞ்சே?
காப்பி எதற்காக?

கையினில் சுக்குடன் மல்லி இருக்கையில்
காப்பி எதற்காக?

தீப்பட்ட மெய்யும் சிலிர்க்க இனிப்புக்கு
வாய்ப்புற்ற தெங்கு வளர்ந்த தென்னாட்டினில்
காப்பி எதற்காக?

ஆட்பட்டாய் சாதி சமயங்களுக்கே
அடிமை வியந்தாய் ஆள்வோர் களிக்கப்
பூப்போட்ட மேல்நாட்டுச் சிப்பம் வியந்தாய்
போதாக் குறைக்கிங்குத் தீதாய் விளைந்திட்ட
காப்பி எதற்காக?

திரும்பிய பக்கமெல் லாம்மேல் வளர்ந்தும்
சிவந்து தித்திப்பைச் சுமந்து வளைந்தும்
கரும்பு விளைந்திடும் இந்நாட்டு மண்ணும்
கசப்பேறச் செய்திடும் சுவையே இலாத
காப்பி எதற்காக?

---

*குறிப்புரை—*

பூப்போட்ட மேல்நாட்டுச் சிப்பம் வியந்தாய்-ஓவியம் தீட்டிய மேல்நாட்டுச் சரக்குக் கட்டுகள் மேலானவை என்று ஒப்பினுய்.

# தமிழ்

## தமிழ்

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரரின் வீரமும், வெற்றியும், நீயே

தாழ்ந்திடு நிலையினில் உனைவிடுப் பேனோ
தமிழன்எந் நாளும் தலைகுனி வேனோ
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் நீஉயிர் நான்மறப் பேனோ

செந்தமிழே! உயிரே! நறுந் தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே
நைந்தா யெனில்நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே

முந்திய நாளினில் அறிவும்இ லாது
மொய்த்தநன் மனிதராம் புதுப்புனல் மீது
செந்தாமரைக்காடு பூத்தது போலே
செழித்தஎன் தமிழே ஒளியே வாழி!

---

குறிப்புரை—

நல்கிடும்-கொடுத்திடுகின்ற.
தோன்றுடல்-தோன்றிய உயிர்.
உடல் நீ, உயிர் நான் என்று பிரித்தும் பொருள் [உணர்க.
ஒளி-புகழ்

## தமிழ்ப் பள்ளு

ஆடுவமே பள்ளுப் பாடுவமே! — தமிழ்
ஆட்சியின் மாட்சியில் கூடுவமே — ஆடுவமே!
கோடுயர் வேங்கடக் குன்றமுதல் — நல்ல
குமரிமட்டும் தமிழர் கோலங் கண்டே
 நாம் — ஆடுவமே...

மானிடம் என்னுமோர் ஆதிப்பயிர் — தமிழ்
மக்களென் றே குதித் தாடுவமே!
கானிடை வாழ்ந்திட்ட மனிதர்க்கெலாம் — நல்ல
கதியினைக் காட்டினர் தமிழ ரென்றே
 நாம் — ஆடுவமே...

மூலமென்றே சொல்லல் மூத் தமிழாம் — புவி
மூர்க்கம் தவிர்த்ததும் அப் புத்தமுதாம்!
ஞாலமெலாம் தமிழ், தமிழர்களே — புவி
நாம்' எனவே குதித் தாடுவமே!
 நாம் — ஆடுவமே...

வானிடை மிதந்திடும் தென்றலிலே — மணி
மாடங்கள் கூடங்கள் மீதினிலே,
தேனிடை ஊறிய செம்பவழ — இதழ்ச்
சேயிழை யாரொடும் ஆடுவமே
 நாம் — ஆடுவமே...

கவிதைகள், காவியம், உயர்கலைகள், — உளம்
கவர்ந்திடும் சிற்பமும் சிறந்தனவாம்
குவிகின்ற பொன்பொருள் செந்நெலெலாம் இங்குக்
குறையில வாம் என் றாடுவமே
 நாம் - ஆடுவமே...

---

குறிப்புரை —

ஞாலம் - உலகம். சேயிழையாரொடும் - பெண்களோடு

# நெஞ்சுக்கு நீதி

சூதும் வாதும் நிறைந்த பூதலமீது நல்லார்
ஓதும் வழி நடந்தால் யாதும் துயரமில்லை
ஏதும் சந்தேகம் உளதோ—நெஞ்சே இதில்,
தீது சிறிதும் உளதோ?

சாதி சமயக்கடை வீதியின் அப்பால் ஒரு
சோதி அறிவிற் சரி நீதி விளங்கும் அதைக்
காதினில் தினம் கேட்பாய்—நெஞ்சே இந்த
மேதினி தனைமீட்பாய்

கூழுமில்லாது நாட்கள் ஏழும் பசித் துன்பமே
சூழும்படியே பிறர் தாழும் நிலை தவிர்க்க
வாழும் முறைமை சொல்வார்— நெஞ்சே நல்லார்
பாழும் இருளைக் கொல்வார்

மேழி யுழவன்பாட்டும், கோழியின் ஆர்ப்பும் கேட் [டாய்
ஆழியிற் கதிர்ஏறும் நாழிகை யாயிற்றே
வாழிய மனப்பாவாய்—அறிஞர் காட்டும்
ஊழியம் செயப் போவாய்

---

குறிப்புரை—

பூதலம்-உலகம்.
ஆர்ப்பும்-கூவுவதும்.
ஆழி-கடல்.
கதிர்-சூரியன்.

## தமிழர் முரசு

உயர்வென்று கொட்டுக முரசே—நல்ல
உண்மைத் தமிழர்கள் வாழ்வு!
அயர்வில்லை அச்சமிங் கில்லை—புவி
ஆளப்பிறந்தவன் தமிழன்.
உயர்வென்று கொட்டுக முரசே!

அயல் என்று கொட்டுக முரசே!—உற
வான திராவிடர் அல்லார்!
துயர் செய்ய எண்ணிடும் பகைவர்—திறம்
தூள் என்று கொட்டுக முரசே!
உயர்வென்று கொட்டுக முரசே

அறிவுள்ள திராவிடர் நாட்டில்—சற்றும்
ஆண்மை யில்லாதவர் வந்து
நமர் பசிகொள்ள நம் சோற்றை—உண்ண
நாக்கைக் குழைப்ப துணர்ந்தோம்
உயர்வென்று கொட்டுக! முரசே

தமிழ்நாடு தமிழருக் கென்றே— இந்தச்
சகத்தில் முழக்கிடு முரசே
நமை வென்ற நாட்டினர் இல்லை—இதை
நாற்றிசை முற்றும் முழக்கு!
உயர்வென்று கொட்டுக! முரசே

---

குறிப்புரை—

தமிழ்நாடு வடக்கில் விந்திய மலையையும். தெற்கில் குமரியையும் எல்லையாக உடைய பெருநாடு; திராவிடநாடு என்பதும் அதுவே.

# எழுச்சி

தமிழனே இது கேளாய்—உன்பால்
சாற்ற நினைத்தேன் பல நாளாய்

கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு;
காணும் பிற மொழிகளோ வெறும் வேம்பு!
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு
நம் உரிமைதனைக் கடித்த தப் பாம்பு
தமிழனே இது கேளாய்

தனித்தியங் கும்தன்மை தமிழினுக் குண்டு;
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு!
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு
தமிழனே இது கேளாய்

வஞ்சகர், வந்தவர் தமிழாற் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்
நாமுணர்ந்தோம்; இந்நாள் அவரஞ்சி விழித்தார்
தமிழனே இது கேளாய்

---

குறிப்புரை—

சாற்ற-சொல்ல.
கமழும்-புகழ்கொண்ட.
ஓம்பு-காப்பாற்று.
தாம்பு-கயிறு.

## எந்நாள்?

அந்த வாழ்வுதான் எந்தநாள் வரும்?
அந்த வாழ்வுதான்

இந்த மாநிலம் முழுதாண்டிருந்தார்
இணையின்றி வாழ்ந்தார் தமிழ்நாட்டு வேந்தர்
அந்த வாழ்வுதான் எந்தநாள் வரும்?

ஒலி என்பதெல்லாம் செந்தமிழ் முழக்கம்;
ஒளி என்பதெல்லாம் தமிழ்க் கலைகளாம்!
புலி, வில், கயல் கொடி மூன்றினால்
புது வானமெங்கும் எழில் மேவிடும்
அந்த வாழ்வுதான் எந்தநாள் வரும்?

குறைவற்ற செல்வம், வாழ்வில் இன்பவாழ்வு
கொண்ட தமிழனுள்ளம் கண்ட தமிழிசை,
பிற மாந்தர்க்கும் உயிரானதே
பெறலான பேறு சிறிதல்லவே
அந்த வாழ்வுதான் எந்தநாள் வரும்?

---

குறிப்புரை—

ஒளி-புகழ்.
ஒளி என்பதெல்லாம்-புகழுக்குரியது என்பதனைத்தும்
புலி, வில், கயல் மூன்றும் மூவேந்தர் கொடிகள்.

## பாண்டியன் மேற்காதல்

பாண்டியன் என் சொல்லைத் தாண்டிப் போனாண்டி,
பாண்டியன் என் சொல்லை...

ஈண்டு மயலில் நான் தூண்டிலில் மீனாய்
மாண்டிட விடுத்தே வேண்டிட வேண்டிட,
பாண்டியன் என் சொல்லை...

தமிழிசைப் பேச்சும், செங்கோ லோச்சும்,
தடக்கை வீச்சும், காதலைப் பாய்ச்சும்,
இமைப்பினில் ஓடி அவனைத் தேடி
என்னகம் நாடி வாடி போடி
பாண்டியன் என் சொல்லை...

பிரிந்திடும் போது நெஞ்சு பொறுது;
வரும்போது பேசா திருக்க ஒண்ணாது
எரிந்திடும் சினத்தில் எதிர்வரு வானேல்
என்னுயிர் தாவிடும் அன்னவன் மேல்
பாண்டியன் என் சொல்லை...

---

குறிப்புரை—

தலைவி தோழிக்குச் சொல்வது இது.
ஈண்டு-இங்கே.
தமிழிசைப் பேச்சு-இசைத்தமிழ் பயக்கும் இனிமை யுடைய பேச்சு

## தமிழன்

தாயின்மேல் ஆணை! தந்தைமேல் ஆணை!
தமிழகமேல் ஆணை!
தூய என் தமிழ்மேல் ஆணையிட் டேநான்
தோழரே உரைக்கின்றேன்:

நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டே,
ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்

தமிழரின் மேன்மையை இகழ்ந்தவ னைஎன்
தாய் தடுத் தாலும் விடேன்
எமை நத்துவாயென எதிரிகள் கோடி
இட்டழைத்தாலும் தொடேன்

"தமக்கொரு தீமை" என்று நற்றமிழர்
எனை அழைத்திடில் தாவி,
இமைப்பினில் ஓடித் தரக்கடவேன் நான்
இனிதாம் என் ஆவி!

மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு
வாழ்ந்த என் மறவேந்தர்
பூனைகள் அல்லர்; அவர்வழி வந்தோர்
புலிநிகர் தமிழ் மாந்தர்!

ஆன என் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்!
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்
குவப்புடன் நான் சேர்ப்பேன்.

## இன்பத் தமிழ்

இன்பந் தருந்தமிழில் அன்பு பிறந்த துண்டு;
துன்பம் இனியு முண்டோ
சொல் சொல் சொல் பகையே!—
முன்பு துருப்பிடித்தி ருந்த படைக்கலமாம்
முத்தமிழ் ஒளி அறிந்து
செல் செல் செல் பகையே
இன்பந் தருந் தமிழில்...

தெள்ளும் தமிழில் இசைத் தேனைப் பிழிந்தெடுத்துத்
தின்னும் தமிழ் மறவர்
யாம் யாம் யாம் பகையே!
துள்ளும் பகை முடித்துக் கூத்திடுவோம் தமிழர்
கொள்கை நிறைவடைந்து
போம் போம் போம் பகையே
இன்பந் தருந் தமிழில்...

---

குறிப்புரை—

தெள்ளும் தமிழில்-தெளிவுற்ற தமிழாகிய தின்பண்டத்தில்,
இசைத்தேனை- இசையாகிய தேனை,
பிழிந்து-வார்த்து
எடுத்து-தேன்வார்த்த அத்தின்பண்டத்னை எடுத்து,
தின்னும் தமிழ் மறவர் யாம்-தின்னும் தமிழினத்தாராகிய வீரர் யாங்கள்.
அத்தகைய தமிழ்த் தின்பண்டம் புறப்பொருள் என்க.

# உலகின் நோக்கம்

உவகை உவகை உலகத்தாயின் கூத்து!—வந்து
குவியுதடா நெஞ்சில்
உவகை உவகை!

எவையும் தன்னுள் ஆக்கிய பெருவெளி
எங்கும் அடடே தாயின் பேரொளி
உவகை உவகை!

அவிழும் கூந்தல் வானக் கருமுகிலாம்—இடையினின்
றலையும் பூந்துகில் பெருவெளி எங்கும் போம்
தவழும் புதுநகை மின்னித் துலங்கும்
தாய்நின் றுடிய அடி இடி முழங்கும்
உவகை உவகை!

தொடுநீள் வானப் பெருவில் ஒருகையில்—பெரும்புறம்
தூளாகிடவரு கதிர்வேல் ஒருகையில்
அடுநீள் விழியிற் கனலைப் பெருக்கி
ஆடும் திறல்கண் டோடும் பகைதான்
உவகை உவகை!

அகலொளி விளக்கு நிலவினில் அவள் ஆடும்!—ஆடிநின்
றந்தமிழின்பத் தென்பாங்கிற் பாடும்!
துகளறு விண்மீன் துளிகள் பறக்கத்
துடிஇடை நெளியும் துணைவிழி உலவும்
உவகை உவகை!

அறிவே உயிராய் அதுவே அவளாகி—மற்றுள
அறமென்ப வெலாம் அழியும் எனவோதிக்
குறியும் செயலும் ஒன்ருய் இயலக்
கூத்தாடுந் தாய் பார்த்திடு தோறும்
உவகை உவகை!

மடமைப் பகைமையும் சாகப் பின்வருமோர்—கொடிதாம்
வறுமைத்தீயும் அலறிப் புறமேக
அடிமைத் தனமே துகள் துகளாக
ஆடுந் தாயவள் நாளும் வாழிய
உவகை உவகை!

---

குறிப்புரை—

தொடுநீள் வானப் பெருவில் - தொடுகின்றதான
பெரிய வானவில். [நீண்ட
ஓடும்பகை-பகை ஓடும்!
உலகின் பகை என்பது அமைதியைக் கெடுக்கும்
[சாதி
மதம் ஆண்டான் அடிமை என்ற நிலை ஆகியவை.

# தமிழ் நாடு

சேரன் செங்குட்டு வன் பிறந்த
வீரம் செறிந்த நாடிதன்றோ?
சேரன் செங்குட்டுவன்

பாரோர் புகழ் தமிழ்ச் சேயே
பகை யஞ்சிடும் தீயே
நேரில் உன்றன் நிலையை நீயே
நினைந்து பார்ப் பாயே
சேரன் செங்குட்டுவன்

பண்டிருந்த தமிழர் மேன்மை
பழுதாக முழு துமே
கண்டிருந்தும் குகையிற் புலிபோல்
கண் ணுறக்கம் ஏனோ?
சேரன் செங்குட்டுவன்

குறிப்புரை—

சேரன் செங்குட்டுவன்-ஒரு பெயர்.
இவன், கனகன் விசயன் என்னும் ஆரிய மன்னர்களை வென்று, அவர்கள் இமயமலையின் கல் சுமக்க வைத்து அக் கல்லால் கண்ணகி நிறுவினவன்

# தமிழ்

வெண்ணிலாவும் வானும் போலே
வீரனும்கூர் வாளும் போலே
வெண்ணிலாவும் வானும் போலே!

வண்ணப் பூவும் மணமும் போலே
மகர யாழும் இசையும் போலே
கண்ணும் ஒளியும் போலே எனது
கன்னல் தமிழும் நானும் அல்லவோ
வெண்ணிலாவும் வானும் போலே!

வையகமே உய்யு மாறு
வாய்ந்த தமிழ்என் அரும் பேறு!
துய்யதான சங்க மென்னும்
தொட்டிலில் வளர்ந்த பிள்ளை
(தம்) கையிலே வேலேந்தி—இந்தக்
கடல் உலகாள்மூ வேந்தர்
கருத் தேந்திக் காத்தார்—அந்தக்
கன்னல் தமிழும் நானும் நல்ல
வெண்ணிலாவும் வானும் போலே!

குறிப்புரை—

வண்ணப்பூ-அழகிய பூ
மூவேந்தர்-சேர சோழ பாண்டியர்கள்.

## அன்றும் இன்றும்

பண்டு தமிழ்ச் சங்கத்தை
உண்டு பண்ணிய மன்னன்— சீரெல்லாம்,
விண்டு புகழ்ந்து பாடி
இன்னும் வியக்கின்றார் இப்— பாரெல்லாம்!

அண்டும் புலவர்க் கெல்லாம்
அந்நாள் மன்னர் கொடுத்த— கொடைதானே,
தண்டமிழ் இந்நாள் மட்டும்
சாகாமைக்கே அடிப்— படை மானே!

புலவர் நினைப்பை யெல்லாம்
பொன்னெழுத்தால் பதித்து— நூலாக்கி,
நலம் செய்தா ரடி மானே
நம் தமிழ்வேந்தர் நம்மை— மேலாக்கி!

இலை என்ற புலவர்க்கோ
எடையின்றிப் பொன்தந்தார்— மூவேந்தர்,
கலைதந்தார் நமக்கெல்லாம்
அதனால் இன்றைக்கு நாம்— தமிழ் மாந்தர்!

---

குறிப்புரை—

பார் எல்லாம்-பாரில் எங்கும்.
இலை-இல்லை.

# பெண்கள்

## பெற்றோர் ஆவல்

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்கமாட் டாயா?—எமக்
கின்பம் சேர்க்கமாட் டாயா?—நல்
லன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நீ
அல்லல் நீக்கமாட் டாயா?—கண்ணே
அல்லல் நீக்கமாட் டாயா? (துன்)

வன்பும் எளிமையும் சூழும் நாட்டிலே
வாழ்வில் உணர்வு சேர்க்க—எம்
வாழ்வில் உணர்வு சேர்க்க—நீ
அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
ஆடிக் காட்டமாட் டாயா?—கண்ணே
ஆடிக் காட்டமாட் டாயா? (துன்)

அறமிதென்றும்யாம் மறமிதென்றுமே
அறிகிலாத போது—யாம்
அறிகிலாத போது—தமிழ்
இறைவனாரின் திருக் குறளிலே ஒருசொல்
இயம்பிக் காட்டமாட் டாயா?—நீ
இயம்பிக் காட்டமாட் டாயா? (துன்)

புறம்இதென்றும்நல் லகம்இதென்றுமே
புலவர் கண்ட நூலின்—தமிழ்ப்
புலவர் கண்ட நூலின்—நல்
திறமை காட்டிஉனை ஈன்ற எம்உயிர்ச்
செல்வம் ஆகமாட் டாயா?—தமிழ்ச்
செல்வம் ஆகமாட் டாயா! (துன்)

# பெண் கல்வி

பெண்களால் முன்னேறக் கூடும்;—நம்
வண்தமிழ் நாடும்! எந்நாடும்

கண்களால் வழிகாண முடிவதைப் போலே
கால்களால் முன்னேற முடிவதைப் போலே,
பெண்களால் முன்னேறக் கூடும்!

படியாத பெண்ணினால் தீமை!—என்ன
பயன்விளைப் பாளந்த ஊமை?
நெடுந்தமிழ் நாடெனும் செல்வி,—நல்ல
நிலைகாண வைத்திடும் பெண்களின் கல்வி!
பெண்களால் முன்னேறக் கூடும்!

பெற்றநல் தந்தைதாய் மாரே,—நும்
பெண்களைக் கற்கவைப் பீரே!
இற்றைநாள் பெண்கல்வி யாலே,—முன்
னேறவேண் டும்வைய மேலே!
பெண்களால் முன்னேறக் கூடும்!

---

குறிப்புரை—

இற்றைநாள்-இன்றை நாள்.
வையம்-உலகம்.

## தந்தை பெண்ணுக்கு

தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
சாலைக்குப் போஎன்று சொன்னாள் உன் அன்னை!
சிலைபோல ஏனங்கு நின்றாய்? — நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்? — கல்வி
வேளைதோ றும்கற்று வருவதால் படியும்!
மலைவாழை அல்லவோ கல்வி? — நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!

படியாத பெண்ணா யிருந்தால், — கேலி
பண்ணுவார் என்னை இவ் வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடுமுன் ஓடு! — என்
கண்ணல்ல? அண்டைவீட்டுப் பெண்களோடு!
கடிதாய் இருக்குமிப் போது! — கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது!
கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு, — பெண்
கல்விபெண் கல்விஎன் கின்றதன் போடு!

---

குறிப்புரை—

கடிகாரம் ஓடுமுன் ஓடு என்பது கடிகாரத்தின் முள் எட்டு என்ற எண்ணை நோக்கி ஓடி நிற்குமுன் நீ பாட சாலை நோக்கி ஓடு என்ற கருத்தை விளக்குவது.

# ஆண் பெண் நிகர்

ஆண் உயர் வென்பதும் பெண் உயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை!
வாணிகம் செய்யலாம் பெண்கள்!—நல்
வானூர்தி ஓட்டலாம் பெண்கள்!
ஆணுயர் வென்பதும்...

ஏனை அசைத்தலும் கூடும்;— அதை
யார் அசைத் தாலுமே ஆடும்!
வீணை மிழற்றலும் கூடும்;— அது
மெல்லியின் விரலுக்கா வாடும்?
நாணமும் அச்சமும் வேண்டும்— எனில்
ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும்
ஆணுயர் வெண்பதும்...

சேயிழை மார்நெஞ்ச மீது — நாம்
சீறுபுலி யைக்கா ணும் போது
தீயதோர் நிலைமை இங் கேது?— நம்
தென்னாட்டின் அடிமைநில் லாது.
தாயராய்த் தொண்டாற்ற வேண்டும்— பல
தொழிற்கல்வி யுங்கற்க வேண்டும்
ஆணுயர் வென்பதும்...

---

*குறிப்புரை—*

சேயிழை மார் நெஞ்சமீது-பெண்களின் உள்ளத்தில். சீறு புலியைக் காணும்போது - சீறுகின்ற புலியைப் பார்க்க நேரும் நாளில், அதாவது புலிக்குள்ள மறத் தன்மையைப் பெண்களின் உள்ளம் அடைந்தால் என்றபடி

# பெண்கள் கடன்

கலையும் நற்சிலம்பும் பூண்டு— பெண்ணே
ச்சியும் சூழ்ச்சியும் தாண்டு!
கவில்லை அகம்புறமும், நாலிரண்டும், நெஞ்சம்
ந்தோறும் புகுந்தோறும் அறம் எதிரிற் கொஞ்சும்
மேகலையும்...

ழ்காத்து, நாட்டினைக் காப்பாய்—பெண்ணே
ழரின் மேன்மையைக் காப்பாய்!
ழகம் நம்ம தென் ரூர்ப்பாய்.
டையினைக் காலினால் தேய்ப்பாய்!
ழும் சோலையும், ஆறும்நற் குன்றமும் கொண்டாய்
ழர் மரபினை உன்னுயிர்' என்பதைக் கண்டாய்,
மேகலையும்...

வேந்தர் கொடிகண்ட வானம்— இன்று
ற்றிலும் காண்கிலாய் ஏனும்
எனப் பகை தானும்
வே காத்திடுக மானம்
வெலாம் தென்றலும் பூக்களும் விளையாடும் நாட்டில்
ளியும் செந்நெலும் பயனைப் புரிந்தமணி வீட்டில்
மேகலையும்...

---

றிப்புரை—

மேகலை-மணிமேகலை,
நற்சிலம்பு-சிலப்பதிகாரம்.
அகம்புறமும்-அகப்பொருள் நூலும் புறப்பொருள் நூலும்.
நால் இரண்டும்-நாலடியாரும் திருக்குறளும்.

## அச்சந்தவிர், மடமை நீக்கு!

அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்
அழகிய தமிழ்நாட்டின் கண்கள்!
உச்சி இருட்டினில் பேய்வந்த தாக
உளறினல் அச்சமா? பேய்என்றுண்டா?
அச்சமும் மடமையும்...

முச்சந்தி காத்தானும் உண்டா?—இ
முனுமுனுப் பதுநேரில் கண்டா?
பச்சைப் புளுகெலாம் மெய்யாக நம்பிப்
பல்பொருள் இழப்பார்கள் மடமை விரும்பி!
அச்சமும் மடமையும்...

கள்ளுண்ணும் ஆத்தாளும் ஏது? மிகு
கடியசா ராயமுனி ஏது?
விள்ளும்வை சூரிதான் மாரியாத் தாளாம்;
வேளைதோறும் படையல்வேண்டும்என் பாளாம்
அச்சமும் மடமையும்...

மடமைதான் அச்சத்தின் வேராம்—அர்
மடமையால் விளைவதே போராம்
கடமையும் அறமுநல் லொழுக்கமும் வேண்டும்
கல்விவேண் டும்அறிவு கேள்வியும் வேண்டும்
அச்சமும் மடமையும்...

---

குறிப்புரை—

மடமை- அறியாமை.
வைசூரி- அம்மை நோய்.

# தாலாட்டு

ஆராரோ ஆரிரோ ஆராரோ ஆரிரோ
சீரோடு பூத்திருந்த செந்தாமரை மீது
நேரோடி மொய்த்துலவு நீலமணி வண்டுதனைச்
செவ்விதழால் தான்மூடும் சேதிபோல் உன்விழியை
அவ் இமையால் மூடியே அன்புடையாய் நீயுறங்கு.
கன்னங் கறேலென்று காடுபட்டமேகத்தில்
மின்னி வெளிப்பட்ட விண்மீன்போல் உன்றன்விழி,
சின்ன இமையைத் திறந்ததேன் நீயுறங்கு!
கன்னலின் சாறே கனிச் சாறே நீயுறங்கு!
குத்துண்ட கண்ணாடி கொண்டபல வீரல்கள்போல்
துத்திக்காய் போலச் சுடர்முகத்தை நீ சுருக்கி
ஏனழுதாய் என்றன் இசைப்பாட்டே கண்ணுறங்கு!
வான்நழுவி வந்த வளர்பிறையே கண்ணுறங்கு!
கன்னம்பூரித்துக் கனியுதடு மின் உதிர்த்துச்
சின்னவிழி பூத்துச் சிரித்ததென்ன செல்வமே?
அன்னைமுகம் வெண்ணிலவே ஆனாலும் உன்விழியைச்
சின்னதொரு செவ்வல்லி ஆக்காமல் நீ யுறங்கு!
நெற்றிக்கு மேலேயுன் நீலவிழி யைச் செலுத்திக்
கற்றார்போல் என்ன கருதுகின்றாய்? நீ கேட்டால்
ஆனை அடிபோல் அதிரசத்தைச் சுட்டடுக்கித்
தேனில் துவைத்தெடுத்துத் தின்என்று தாரேனோ?
கொட்டித் தும்பைப்பூக் குவித்ததுபோல் உன்னெதிரில்
பிட்டுநறு நெய்யில் பிசைந்துவைக்க மாட்டேனா?
குப்பை மணக்கக் குடித்தெருவெல் லாம்மணக்க
அப்பம் நிலாப் போல் அடுக்கி வைக்க மாட்டேனா?
மீன்வலைசேந் தும்கயிற்றை வேய்ந்த வளையம்போல்
தேன் குழல்தான் நான்பிழிந்து தின்னத் தாரேனா?
விழுந்துபடும் செங்கதிரை வேல்துளைத்த தைப்போல்

உழுந்துவடை நெய்யொழுக உண்ணென்று தாரேனே?
தாழையின்முள் போன்ற தகுசி ரகச்சம்பா
ஆழ உரலில் இடித்த அவலைக்
கொதிக்குநெய் தன்னில்நான் கொட்டிப் பொரித்துப்
பதக்குக் கொருபதக்காய்ப் பாகும் பருப்புமிட்டே
ஏலத்தைத் தூவி எதிர்வைக்க மாட்டேனே?
ஞாலத்தொளியே நவிலுவதை இன்னுங்கேள்:
செம்பொன்னை மேற்பூசித் தேனைச் சுளையாக்கிக்
கொம்பில் பழுத்தநறுங் கொய்யாப் பழமும்
செதில் அறுத்தால் கொப்பரையில் தேன்நிறைந்ததை
[போ
எதிர்த்தோன்றும் மாம்பழமும், இன்பப் பலாப்பழமும்
வேண்டுமென்றால்உன்னெதிரில் மேன்மேற் குவிந்துவிடு
பாண்டியனார் நன்மரபின் பச்சைத் தமிழே
நெருங்கும் உறவுனக்கு நீட்டாண்மைக் காரர்
அறஞ்சிறந்த பல்கோடி ஆன தமிழருண்டே!
எட்டும் உறவோர்கள் எண்ணறுதி ரவிடர்கள்
வெட்டிவா' வென்றுரைத்தால் கட்டிவரும் வீரர் அவர்!
என்ன குறைச்சல் எதனால் மனத் தாங்கல்?
முன்னைத் தமிழர் முடிபுனைந்து ஞாலத்தை
ஓர் குடைக்கீழ் ஆண்ட உவகை உனக்குண்டு!
சேரனார் சோழனார் சேர்ந்தபுகழ் உன் புகழே!
ஓவியக்க ரைகண்டார் உண்மைநெறி தாம்வகுத்தார்
காவிய சிற்பத்தில் கவிதையினில் கைகாரர்
உன்னினத்தார்என்றால் உனக்கின்னும் வேண்டுவதேன்
பொன்னில் துலங்குகின்ற புத்தொளியே கண்ணுறங்கு
கற்சுவரை மோதுகின்ற கட்டித்தயிரா, நற்
பொற்குடத்தில் வெண்ணெய்தரும் புத்துருக்குநெய்யா
ஆனைப்பசுக்கள் அழகான வெண்ணிலவைப் [நல்
போல்நிறைத்தபானைப் புளியக்கொட்டை தான்மிதக்கும்
இன்ப நறும்பாலா என்ன இல்லை? கண்ணுறங்காய்

முன்பில் விளைந்தஎன் ஆருயிரே கண்ணுறங்கு!
காவிரியின் பாதாளக் காலின் சிலம்பொலியும்,
காவிரியப் பாடும் புதிய இருப் பாட்டும்,
கேட்ட உழவர் கிடுகிடென நல்விழாக்
கூட்டி மகிழ்ச்சி குதிகொள்ளத் தோளில்
கலப்பை அகற்றி அழகுவான் வில்போல்
கலப்பை எடுத்துக் கனஎருதை முன்னடத்திப்
பஞ்சம் தலைகாட்டப் பாராப் படைமன்னர்,
நெஞ்சம் அயராமல் நிலத்தை உழுதிடுவார்,
வித்துநெல் வித்தி விரியும் களையெடுத்துக்
காத்துநெல் முற்றித் தலைசாய்ந்த கோலத்தை
மாற்றி யடித்து மறுகோலம் செய்த நெல்லைத்
தூற்றிக் குவித்துத் துறைதோறும் பொன்மலைகள்
கோலம் புரியும் குளிர்நாடும் உன்னதுவே!
ஞாலம் புகழும் நகைமுகத்தோய் கண்ணுறங்கு!
செம்புழுக்கல் பாலோடு பொங்கச் செழுந்தமிழர்
கொம்புத்தேன் பெய்து குளிர்முக் கனிச்சுளையோ
டள்ளூற அள்ளி முழங்கையால் நெய்யொழுக
உள்ளநாள் உண்ணும் உயர்நாடும் உன்னதுவே
கோட்டுப்பூ நல்ல கொடிப்பூ நிலநீர்ப்பூ
தோட்டத்து வண்டெல்லாம் நல்ல இசை பாய்ச்சக்
கொத்தும் மரங்கொத்தி, தாளங் குறித்துவரத்,
தத்துபுனல் தாவிக் கரையில் முழாமுழக்க,
என்னும் பசுமை விரிதழைப்பூம் பந்தலிலே
மின்னும் படம்விரித்துப் பச்சை மயிலாடுவதும்,
கிள்ளைக் கருங்குயிலோ பின்பாட்டுப் பாடுவதும்,
கொள்ளை மகிழ்ச்சித் தமிழ்நாடு கொண்டாய் நீ
குப்பையெலாம் மாணிக்கக் கோவை,கொடுந்தூம்பிற்
கப்பும் கழுவடையில் கண்மணியும் பொன்மணியும்!
ஆடும் குளிர்புனலோ அத்தனையும் பன்னீராம்!

சூடாமணி வரிசை தூண்டாச் சரவிளக்காம்!
எப்போதும் நாட்டார் இழைக்கும் மணியிழையில்
கொப்பொன்றே கோடிபெறும் கொண்டைப்பூ என்
/பெறுமோ
ஐந்தாறு வெண்ணிலவும் ஆறேழு செங்கதிரும்
வந்தாலும் நாணும் வயிரத் திருகாணி,
ஒன்றுக்கே வையத்தை ஒப்படைக்க வேண்டுமெனில்
மூன்மார்பின் தொங்கலுக்கு மூன்றுலகு போதுமா?
மின்காய்த்த வண்ணம் மிகுமணிக ளோடுபசும்
பொன்காய்த்த பூங்கொடியா ரோடுதம் காதலர்கள்
எண்ண மொன்ருகியே இல்லறத் தேர்தன்னைக்
கண்ணுங் கருத்தும் கவருமோர் அன்புநகர்,
ஆரும்நிகர் யார்க்கும் அனைத்தும் சரிபங்கென்
ருேரும் நகர், நோக்கி ஓடுந்தமிழ் நாடு
நின்நாடு! செல்வம் நிறைநாடு கண்ணுறங்கு!
பொன்னுன தொட்டிலில் இப் போது.

---

## வெற்றிலை வேண்டுமா?

ஒருவேளை அல்ல திருவேளை வெற்றிலை போடு!—போடா
தொதுக்கலும் நல்லஏற் பாடு!
சுரந்திட்ட எச்சிலை வாயினில் தேக்குதல் போலே - வேறு
தூய்மையில் லாச்செயல் கண்டதில்லை வைய மேலே (ஒரு)
கரியாகுமே உதடு! கோவைக்
கனியை நீ கார்ப்பதும் தேவை!
தெரியாத ஆடவர், வாய்நிறைய எச்சிலின் சேறு
தேக்கியே திரிவார்கள் அவருக்கும் நீ இதைக்கூறு! (ஒரு)
பூவைமார் ' நல்விதழை'' நல்ல
புன்னகை சிந்திடும் ''பல்லை''
கோவையோ முல்லையோ என்றுரைப்பார், கல்வி வல்லோர்
காவிபடி யும்படி செய்யலா மோ இதைச் சொல்வாய் (ஒரு)